# பன்னிரண்டு மாதங்கள்



சித்திரையோடு வைகாசி

சிறந்த நல்ல இளவேனில்

ஆனிஆடி மாதங்கள்

அப்பா! மிகவும் முதுவேனில்

ஆவணியோடு புரட்டாசி

ஆகா அழகிய கார்காலம்

ஐப்பசி கார்த்திகை வந்தாலோ

அந்தோ மிகவும் குளிர்காலம்

மார்கழி மாதம் தைமாதம்

முன்னே பனிதான் பெய்மாதம்

மாசி பங்குனி மாதங்கள்

பின்னே பனிபெய் மாதங்கள்.